1981 ஆகஸ்ட் 27]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தற்போது பொஞ்சப்பள்ளியில் சூரியகாந்தி எண்ணெய் ஆலை இருக்கிறது. சேலம், தர்மபுரி மாவட்டங்களில் உற்பத்தியாகும் சூரியகாந்தி எண்ணெய் வித்துக்களை கொண்டு அது இயங்கி வருகிறது. தற்போது சூரியகாந்தி எண்ணெய் பிற மாநிலங்களுக்கு அனுப்பப்பட்டு வருகிறது.

திரு. ஆ. வெள்ளைச்சாமி: சூரியகாந்தி எண்ணெய் தயாரிக்க சூரியகாந்தி விதை எப்படிக் கொள்முதல் செய்யப்படுகிறது?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்படுகிறது.

திரு. க. இரா. சின்னராசு: தர்மபுரி மாவட்டத்தில் உள்ள சூரியகாந்தி தயாரிக்கும் ஆலைக்குப் போதிய சூரியகாந்தி எண்ணெய் வித்துகள் கிடைக்காமல் இருக்கிறது. ஆகவே, அதற்கு மாற்றுத் திட்டம் அரசிடம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: இப்போது விவசாயிகளை உற்சாகப்படுத்தும் வகையில் அதற்கான மானியத் தொகை கொடுக்கப்படுகிறது. அதிகமான விலைக்குக் கொள்முதல் செய்யப்படுகிறது. ஆகவே, அந்தச் சிக்கல் இனிமேல் தீரும் என்று கருதுகிறேன்.

சூரியகாந்தி விதை கட்டுப்பாடு

*வினா எண் 88—திரு பாபு ஜனார்த்தனன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிண்டி தொழிற்பேட்டையில் வேளாண்மைத் துறையின் தாய் இணையகம் தயாரிக்கும் சனோலா எண்ணெய்க்கு மூலப் பொருளான சூரியகாந்தி விதை கிடைக்கவில்லையென்பது உண்மையா?

(ஆ) அது குறித்து அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு கா. காளிமுத்து: (அ) ஆம், போதுமான அளவு கிடைக்கவில்லை.

(ஆ) (1) சூரியகாந்தி சாகுபடியில் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்ட விளம்பரம் செய்யப்பட்டு வருகிறது. (2) சூரியகாந்தி விதை கொள்முதல் ஒவ்வொரு வருடமும் அதிகரிக்கப்பட்டு வருகிறது. கொள்முதல் விலையும் அதிகரிக்கப்பட்டுள்ளது. (3) சூரியகாந்தி சாகுப்படியை அதிகரிக்கும் நோக்கத்துடன் சூரியகாந்தி சாகுபடித் திட்டம் ஒன்று மத்திய அரசின் உதவியுடன் பலவித மானியச் சலுகைகளுடன் எண்ணெய் வித்துக்கள் துறை மூலம் செயல்படுத்தப்பட்டுவருகிறது.

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

[1981 ஆகஸ்ட் 27

திரு. து. புருஷோத்தமன்: கிண்டி தொழிற்பேட்டையிலுள்ள சூரியகாந்தி எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலை சைதைத் தொகுதியில் இருக்கிறது. அதை விரிவுபடுத்தும் வகையில் அரசுக்கு ஏதாவது திட்டம் உண்டா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: இப்போது உத்தேசம் இல்லை.

திரு பெ. சு. திருவேங்கடம்: சூரியகாந்தி எண்ணெய் எதையும் தாங்கும் இதயம் வேண்டுமானால் தேவை என்று சொன்னார்கள். ஏற்கனவே மறைந்த பெரியவர் சி. பா. ஆதித்தனார் அவர்கள் வேளாண்மைத் துறை அமைச்சராக இருந்தபோது அதிகமான அளவுக்கு சூரியகாந்தி பயிரிட முயற்சி எடுக்கப்பட்டது. அந்த அளவுக்கு தற்சமயம் அதிலே ஊக்குவிக்கப்படவில்லை என்று அறிகிறேன். ஆகவே, வேளாண்மை மறுமலர்ச்சியை ஏற்படுத்தி அதிகமான சூரியகாந்தியை உற்பத்தி செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத்தான் மூலக் கேள்விக்கான பதிலிலேயே குறிப்பிட்டேன். விவசாயிகளுக்குத் திருந்திய சாகுபடி முறைகள் கண்கூடாகச் செய்து காட்டி பாத்திகள் அமைப்பது பற்றியெல்லாம் எடுத்துக் கூறப்படுகிறது. மானியத் தொகை கொடுக்கப்படுகிறது. புதிய ரகங்களைச் சாகுபடி செய்யவும், செயல் விளக்கப் பாத்திகள் என்ற முறையில் சூரிய காந்தியை உற்பத்திச் செய்ய தரமான விதைகளைக் கொடுக்கவும் வழிவகைகள் செய்யப்பட்டிருக்கின்றன. டன் ஒன்றுக்கு 300 ரூபாய் வீதம் மானியம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம்.

பரமக்குடியிலுள்ள விதைப்பண்ணை.

*வினா எண் 89—திரு. செ. சிவசாமி: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடியிலுள்ள விதைப்பண்ணையில் என்னென்ன விதைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன?

(ஆ) இப்பண்ணை இலாபகரமாக நடக்கிறதா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) இப்பொழுது பல பயிர் பரிசோதனை நிலையம் ஒன்று 14-11-78 முதல் செயல்பட்டு வருகிறது.

(ஆ) பரிசோதனை நிலையங்களில், லாப நஷ்டக் கணக்கு போட இயலாது.

திரு. செ. சிவசாமி: தலைவர் அவர்களே, பரமக்குடியிலே உள்ள விவசாயப் பண்ணையிலே வருஷம் முழுவதும் பெரும் பகுதியில் வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. எந்த எந்த நிலையில் விவசாயம் எந்த அளவிற்கு அபிவிருத்தி அடைந்திருக்கிறது? அந்தப் பண்ணையை டைரக்டர் ஆப் அக்ரிகல்சர் எப்போதாவது இன்ஸ்பெக்ட் செய்திருக்கிறார்களா?